பா உ மகேஸ்வரன் புத்தாண்டு வழிபாட்டின் போது கொல்லப்பட்டார்



ஈஸ்ற்ஹாம் மகாலட்சுமி ஆலயத் தலைவருக்கு சவால். எதிர்ப்புக் கூட்டம்



ஜெகோவாவின் சாட்சியங்களும் தமிழ் சொலிசிற்றர் மாரும்



கருணாவை இறுக்கும் பிரித்தானியச் சட்டங்கள்



மாதம் ஒரு முறை வெளிவரும் இலவச இதழ், டிசம்பர் 2007 – ஜனவரி 2008, குரல் 21

# லண்டன் குரல்

Voice of London Tamils


## இந்தியாவின் பாதுகாப்பும், இந்தியாவின் இலங்கைக்கான கொள்கையும்

IPKFல் பணியாற்றிய வரும், தெற்காசியப் பிராந்தியம் பற்றிய அரசியல் ஆய்வாளரும், ஆழமான இராணுவ அறிவுடையவருமான

**Col.ஆர் ஹரிகரன் VSM (Retd)** உடன் **கலந்துரையாடல்**

13 ஜனவரி 2008, ஞாயிறு மாலை 2:30 - மாலை 7:00 Quackers House, Bush Rd, Wanstead, London E11 3AU

தொடர்பு: த ஜெயபாலன்: 07800 596 786 கொன்ஸ்ரன்ரைன்: 0208 905 0452 ASATiC & தேசம்



அனைவருக்கும் எமது இனிய

**பொங்கல் வாழ்த்துக்கள்**





நியூஹாம் மேயர் சேர் ரொபின் வேல்ஸ் ஜனவரி 14 மாலை 5 மணிக்கு ஈஸ்ற்ஹாம் ஹை ஸ்ரீற் நோத்தில் தெரு விளக்கேற்றி பொங்கல் நிகழ்வைச் சிறப்பிக்கிறார்.

# தமிழ் இளைஞர்கள் பலரைப் பதம்பார்த்த சாமுராய் வாளுக்குத் தடை

சமுராய் வாள்களுக்கு பிரித்தானியாவில் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 8 மதல் அமுலுக்கு வரும் இச்சட்டத்தை மீறுபவர்களுக்கு நிதிமன்றம் 6 மாத சிறையும் 5000 அபராதமும் விதிக்க முடியும்.



தமிழ் இளைஞர் குழுக்களிடையேயான மோதல்களில் முக்கிய ஆயுதமாகக் கருதப்படும் சாமுராய் வாள்களை இறக்குமதி செய்வது, விற்பனை செய்வது, வாடகைக்கு விடுவது சட்டப்படி குற்றமாக்கப்பட்டு உள்ளது. அதனை வைத்திருப்பவர்கள் சட்டத்தை மீறியவர்களாவார்கள். இப்புதிய சட்டம் பலராலும் வரவேற்கப்பட்டு உள்ளது.

அருகில் உள்ள படங்கள் தமிழ் இளைஞர்களின் வன்முறையைக் கட்டுப்படுத்த ஸ்கொட்லன்ட் யாட் மேற்கொண்ட ஒப்பிரேசன் என்வர் நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களளின் ஒரு பகுதியாகும். இடது புறம் ஒப்பிரேசன் என்வருக்கு உயரதிகாரிகளாக இருந்த ஸ்ரீபன் ஹவுஸ், அன்ரு மேர்பி ஆகியோர் சாமுராய் வாள் ஒன்றை செய்தியாளருக்கு காண்பிக்கின்றனர்.



## கொலைக் குற்றம் சாட்டப்பட்ட சந்தேகநபர்கள் விடுதலை

சிவப்பிரகாஸ் சுப்பிரமணியம்(33) கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட சந்தேக நபர்களான இரு அப்ரோகரீபிய சகோதரர்கள் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாமையினால் விடுவிக்கப்பட்டனர். ஓல்ட் பெயிலியில் நவம்பர் 2007 ல் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு இருந்தது.

2006 ஓகஸ்ட் 31ல் சுப்பிரமணியம் காடையர் குழுவினால் இருப்புக் கம்பியினால் அடித்து, உதைத்து ஆறுதடவைகள் கத்தியால் குத்தப்பட்டு கொல்லப்பட்டார்.

மலேசியாவைச் சேர்ந்த இவர் 2003ல் ஹரோ றோட், வெம்பிளியில் ஹரன் பூட்ஸ் கடையை எடுத்தது முதல் காடைத்தனங்களுக்கு இலக்காகி வந்தார். அதனால் கடையை கொடுத்துவிட்டு வெம்பிளி வடக்கில் புதிய வீட்டுக்கு தனது மனைவியுடன் மாறத் திட்டமிட்டு இருந்தார். அதற்கான முற்பணமும் வழங்கப்பட்ட அன்றே சுப்பிரமணியம் மீதான தாக்குதலும் இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினம் கடைக்கு வந்த சந்தேக நபர்களின் உறவினர்களுடன் ஏற்பட்ட தர்க்கமே இவ்வளவு விபரீதமாக அமைந்ததாக நிதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

மாலை ஒன்பது மணியளவில் கும்பல் ஒன்று கடையைத் தாண்டி சுப்பிரமணியத்தைத் தேடிச் சென்றுள்ளது. அவர்கள் வெளியே சென்றுகொண்டிருந்த சுப்பிரமணியத்தை தாக்கி உள்ளனர். அதனை அவ்வழியால் சென்ற ஒருவர் கண்டு அவர்களை விரட்டியும் உள்ளார். தாக்கப்பட்ட சுப்பிரமணியம் இரத்தம் ஓட ஓட கடைக்குள் வந்து மயங்கி மனைவியின் காலடியில் வீழ்ந்தார். பின் மருத்துவமனைக்கு எடுத்தச் செல்லப்பட்டு அங்கு மரணமானார்.

**உண்மைகள் உறங்குவதில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பா உ மகேஸ்வரன் புத்தாண்டு வழிபாட்டின் போது சுட்டுக்கொல்லப்பட்டார்

கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தியாகராஜா மகேஸ்வரன் புத்தாண்டு அன்று காலை கொழும்பில் வைத்து சுட்டு கொல்லப்பட்டு உள்ளார்.


புதுவருடப் பிறப்பை முன்னிட்டு 9.15 மணியளவில் கொட்டாஞ்சேனை, கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவானேஸ் வரர் ஆலயத்தில் விசேட வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த போதே அவர் மீது இனம் தெரியாத நபர்களினால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் படுகாயமடைந்ததோடு, அவரது மெய்ப்பாதுகாவலர்களில் ஒருவர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டார். மேலும் சம்பவத்தின் போது கோயிலில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த பொது மக்கள் ஆறு பேரும் படுகாயமடைந்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்த மகேஸ்வரன் மிகவும் ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, தீவிர சிகிச்சையளிக்கப்பட்ட போதும், மருத்துவர்களின் தீவிர போராட்டம் பலனின்றிப்போய் முற்பகல் 10.30 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

தியாகராஜா மகேஸ்வரன் கடந்த 2001ம் ஆண்டு பொதுத் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று முதன் முதலாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார்.அப்போதைய தேர்தலில் அதிகாரத்துக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் இந்துக் கலாசார அமைச்சராகவும் பதவி வகித்தார்.

2004ம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது யாழ் மாவட்டத்தில் போட்டியிட விடுதலைப் புலிகள் அமைப்பினர் எதிர்ப்புக் காட்டியதன் காரணமாக மகேஸ்வரன் கொழும்பில் போட்டியிட்டார். அங்கு ஏற்கெனவே கொழும்பு தமிழர்களின் வாக்குப் பலத்தை தன் வசம் வைத்திருந்த மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனுக்கும் மகேஸ்வரனுக்கும் இடையில் பகிரங்க மோதல் வலுப்பெற்றது.



அத்தேர்தல் காலத்தில் மனோ கணேசன் எம்.பி.யின் கோட்டை என்று வர்ணிக்கப்படும் கொட்டாஞ்சேனையின் ஜிந்துப்பிட்டிப் பகுதியில் வைத்து மகேஸ்வரன் மீது கொலை முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டு இருந்தது. அச்சம்ப வத்தில் கழுத்துப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மகேஸ்வரன் படுகாயமடைந்திருந்தார்.

மேலக மக்கள் முன்னணியே தம்மைக் கொலை செய்ய முயற்சித்ததாக மகேஸ்வரன் குற்றம் சாட்டியிருந்த போதும், அக்கட்சியின் தலைவர் மனோ கணேசன் அதனை மறுத்திருந்ததுடன், மகேஸ்வரனைக் கண்டபடி தாக்கி அறிக்கையும் விட்டிருந்தார்.

மகேஸ்வரன் கொல்லப்படுவதற்கு இரு தினங்களிற்கு முன் டிசம்பர் 30ல் சக்தி தொலைக்காட்சியின் மின்னல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கடத்தல், கப்பம், கொள்ளையடித்தல் படுகொலைகள் கொழும்பில் இருந்து கொண்டு செல்லப்பட்ட துணைராணுவக் குழுக்களால் மேற்கொள்ளப்படுவதாகவும் அதற்கான ஆதாரங்களை தான் ஐ நாவில் சமர்ப்பிக்க உள்ளதாகவும் தெரிவித்திருந்தார். மகேஸ்வரனின் கொலைக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பும் ஏற்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம்சாட்டி உள்ளது.

இதற்கிடையே மகேஸ்வரன் மீது துப்பாக்கி பிரயோகம் செய்த நபர் மெய்ப்பாதுகாவலர்கள் திருப்பிச் சுட்டதில் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் வசந்தன் என்றழைக்கப்படும் இவர் குருநகர் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் தெரியவருகிறது.

மகேஸ்வரனுடைய கொலை தொடர்பாக அரச படைகள் உட்பட ஆயுதங்களைத் தாங்கி உள்ள அனைத்துத் தரப்பினர் மீதும் மக்களுக்கு சந்தேகம் உள்ளது. மகேஸ்வரனுடைய இறுதி நிகழ்வுகள் ஜனவரி 3ல் இடம்பெற ஏற்பாடாகி உள்ளது. அது அரசு எதிர்ப்பு நிகழ்வாக அமையலாம் எனவும் தெரிகிறது.

## வானொலிக் கலை நூல்வெளியீட்டு

விமல் சொக்கநாதன் எழுதிய வானொலிக் கலை நூல்வெளியீட்டு விழா டிசம்பர் 8ல் லூசியம் சிவன் கோவிலில் இடம்பெற்றது. விமல் சொக்கநாதன் பிபிசி தமிழோசையில் நீண்டகாலம் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பெற்றோல்நிலையக் கொள்ளைகள்

ஸ்ரான்மோர் BP பெற்றோல் நிலையத்தில் கொளையடிக்க முற்பட்ட வர்களின் முயற்சி தோல்வி அடைந்தது. பிரதீபன் சுந்தரலிங்கம் கடமையில் இருந்த போது முகமூடி அணிந்து கத்தியுடன் புகுந்த இரு கொள்ளையர்கள் பிரதிபனை முழங்காலில் இருத்தி தொண்டையில் கத்தியை வைத்தனர். தொண்டையில் கத்தியை வைத்தபடி சேவ்ப் எங்கே என்று விசாரித்தனர் இதற்கிடையே கடைக்குள் ஆட்கள் வந்தவுடன் அவர்கள் ஒரிரு நிமிடங்கள் நின்றுவிட்டு தங்கள் முயற்சி பலனளிக்காமல் போகவே வெறும் கையுடன் தப்பி ஓடினர். இச்சம்பவம் ஒக்ரோபர் 29ல் இடம்பெற்றது.

A406ல் உள்ள ஒரு பெற்றோல் நிலையத்தில் புகுந்த திருடர்கள் ரில்லில் நின்றவரின் தலையில் ஓங்கி அடித்து காயப்படுத்தி விட்டு ரில்லில் இருந்த பணத்தைச் சுருட்டிக் கொண்டு ஓடிவிட்டனர். பெற்றோல் நிலையங்களில் நடைபெறும் இந்நிகழ்வுகள் பெரும்பாலும் செய்தி ஆவதில்லை.

# உறவுப் பாலம் அமைக்கும் மலேசிய - சிங்கப்பூர் நூல்தேட்டம்

மலேசிய சிங்கப்பூர்த் தமிழ் படைப்பாளிகளின் நூல்கள் பற்றிய ஆவணமான நூல்தேட்டம் தொகுதி 1 சிங்கப்பூர் தேசிய நூலகத்தினால் 27.11.2007 அன்று மாலை 7 மணிக்கு வெளியிட்டு வைக்கப்பட்டது. ஈழத்து நூல்தேட்டத்தின் தொகுப்பாளர் நூலகவியலாளர் என்.செல்வராஜா இத்தொகுதியையும் கடந்த இரு வருடங்களாகத் தொகுத்து முடித்திருக்கிறார்.

இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராக சிங்கப்பூர் கொள்கை ஆய்வுக் கழகத்தின் இயக்குநர் திரு அருண்மகிழ்நன் கலந்துகொண்டு நூல் அறிமுகத்தையும் மேற்கொண்டார். மலேசிய சிங்கப்பூர் தமிழ் அறிவியலை ஆய்வுசெய்ய உதவும் இத்தகையதொரு நூற்பட்டியல் சிறிய அளவில் 1967இல் அமரர் இராம சுப்பையா அவர்களால் மலாயாப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப் பட்டதாகவும், அம்முயற்சியைத் தொடர 40 ஆண்டுகளாக தங்களில் எவரும் முன்வராத நிலையில், இங்கிலாந்தில் வாழும் ஈழத்தமிழர் ஒருவர் தன் சுய நிதியில் ஒரு பாரிய தொகுப்பாக 2000 நூல்களுக்கு மேல் தொகுத்துள்ளதுடன், இலங்கையில் அதை அச்சிட்டு, சிங்கப்பூரில் தம்மிடம் கொண்டு வந்து சேர்த்திருப்பதையிட்டு தாம் ஈழத் தமிழினத்திற்கு நன்றி கூறுவதாகத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையில் பணியாற்றியவரும், ஆனைக்கோட்டை அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டவருமான கலாநிதி பொ.இரகுபதி இந்நிகழ்வில் சிறப்புரையாற்றி இருந்தார். அவர் தனது உரையில் மலேசியத் தமிழர்களோ சிங்கப்பூர் தமிழர்களோ தனிமைப்படுத்தப்பட்டவர்கள் அல்லர் என்றும், ஈழத்தமிழரின் புலப்பெயர்வின் பின்னர் அவர்களும் உலகத் தமிழர்களாக ஒன்றுசேர்ந்துவிட்டதையே செல்வராஜாவின் இந்த முயற்சி வெளிக்காட்டுகின்றது என்றும் குறிப்பிட்டார். சிங்கப்பூர் எழுத்தாளர்களும் தமிழறிஞர்களும் அன்றைய நிகழ்வில் கலந்து சிறப்பித்திருந்தனர். திரு செல்வராஜா ஏற்புரை நிகழ்த்தினார்.



மேலும் அவுஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச் சங்கம் நவம்பர் 25, இல் மெல்பேர்ண், கிரெய்க்பேர்னில் ஒழுங்கு செய்திருந்த இலக்கியச் சந்திப்பின்போது மெல்பேர்னுக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த நூலகவியலாளர் திரு.என். செல்வராஜாவை கௌரவித்திருந்தார்கள். எழுத்தாளர் லெ.முருகபூபதியின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் போது அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள் பலரும் பிரசன்னமாகி இருந்தனர்.

முன்னதாக 24.11.2007 அன்று விக்ரோரியா ஈழத் தமிழ்ச் சங்கத்தின் 2007ம் ஆண்டுக்கான முத்தமிழ் விழாவிலும் திரு செல்வராஜா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார். அன்றைய தினம் நூல்தேட்டம் பன்னூல் தொகுப்பின் முதல் நான்கு தொகுதிகளினதும் அறிமுக நிகழ்வொன்றும் அதே மேடையில் இடம்பெற்றது. ஈழத்துப் படைப்பாளியான திரு. நித்தியகீர்த்தி நூல்களையும் நூலாசிரியரையும் அறிமுகம் செய்து வைத்தார்.

குரல் 21, ஜனவரி 2008

லண்டன் குரல்

| | |
|---|---|
| ஆசிரியர்: | ஆசிரியர்குழு |
| த ஜெயபாலன் | Dr பி சிவக்குமார் |
| நிர்வாகம்: | ஆர் சுரேஸ்குமார் |
| ரி கொன்ஸ்ரன்ரைன் | ஜோ ஜெயவேந்தன் |

Voice of London Tamils
P O Box 35806
London, E11 3JX, UK

செய்தித் தொடர்பு: 020 8279 0354
நிர்வாகத் தொடர்பு: 020 8905 0452

'லண்டன் குரல்' பத்திரிகை Thesam Publication Ltd இனால் மாதமிரு முறை வெளியிடப்பட்டு வருகிறது. இதில் வெளிவரும் கருத்துக்கள் எப்பொழுதும் 'லண்டன் குரல்' பத்திரிகையினதோ அல்லது வெளியீட்டாளர்களினதோ கருத்துக்களாக இருக்கும் என்பதில்லை. இப்பத்திரிகையில் உள்ள செய்திகள் உண்மையான தகவல் மூலங்களில் இருந்து பெறப்பட்ட சரியான தகவல்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பிரசுரிக்கப்பட்டு உள்ளது. இருப்பினும் இதில் வரும் தவறுகளுக்கு வெளியீட்டாளர்கள் பொறுப்பல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்ஹாம் மஹாலட்சுமி ஆலயத் தலைவருக்கு சவால்

## ஈஸ்ற்ஹாமில் எதிர்ப்புக் கூட்டம்



ஈஸ்ற்ஹாம் லக்ஸ்மி நாராயன் ஆலயத்தின் நிர்வாகத்திற்குள் ஏற்பட்ட விரிசல் மேலும் விகாரமாகிறது. ஆலயத்தின் தலைவர் டொக்டர் அழகராஜா எவ்வித உடன்பாட்டுக்கும் வராமல் விட்ட தவறுகளையும் திருத்திக் கொள்ளாமல் மீண்டும் மீண்டும் புண்களைக் காயப்படுத்துகிறார் என சட்டத்தரணி சிதம்பரப்பிள்ளை டிசம்பர் 8ல் ஆலய பக்தர்கள் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஆலய நிர்வாகத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட அல்லது வெளியேறிய நிர்வாக உறுப்பினர்களும் தலைவர் அழகராஜாவின் நடவடிக்கைகளால் அதிருப்தியுற்ற சில பக்தர்களும் இணைந்து நடத்திய கூட்டத்திலேயே சட்டத்தரணி சிதம்பரப்பிள்ளை அவ்வாறு தெரிவித்தார். ஆலயம் குறிப்பிட்ட பகுதி மக்களை புறக்கணிப்பதாகத் தெரிவித்த அவர் ஆலயம் எல்லோருக்கும் உரியது என்று தெரிவித்தார்.

ஆலயத்தின் அறங்காவல் சபைத் தலைவர் டொக்டர் அழகராஜா மஹாலட்சுமி கோவில் நிர்வாகம் இந்தியர்களுக்கு மட்டுமே உரியது என்று யூன் 8ல் இடம்பெற்ற பூசையின் போது பேசியதை அடுத்தே இவ்வாலய விவகாரம் விகாரம் அடைந்தது.

தற்போது எதிரணியில் உள்ள ஜெகநாதன், சுதர்சன், சங்கரலிங்கம் ஆகியோர் டொக்டர் அழகராஜாவுடனேயே இருந்தவர்கள் என்றும் இப்போது தாங்கள் விலக்கப்பட்டதால் அவர்கள் அழகராஜாவுக்கு எதிராக திரும்ப இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்துவதாகவும் குற்றச்சாட்டுகள் உள்ளது.

டொக்டர் சங்கரலிங்கம் பேசுகையில் பணியில் உள்ளவர்களை மீது உளவு பார்ப்பது, அர்ச்சகர்களையும் பணியாளர்களையும் சொந்த விருப்பு வெறுப்பின் அடிப்படையில் பணியில் அமர்த்துவது அல்லது நீக்குவது என தலைவர் அழகராஜா எதேச்சாதிகாரத்துடன் நடப்பதாகக் குற்றம்சாட்டினார். அலய நிதி விடயங்களும் ஒழுங்கான முறையில் கையாளப்படவில்லை எனவும் அழகராஜா குற்றம்சாட்டி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இக்கூட்டத்தில் இல.தமிழர்கள், இந். தமிழர்கள், தெலுங்கர்கள் என வெவ்வேறு சமூகங்களைச் சேர்ந்தவர்களும் கணிசமான அளவில் கலந்து கொண்டனர். அழகராஜாவின் எதேச்சாதிகாரப் போக்கை அவர்கள் கண்டித்ததுடன் அதற்கெதிராக தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்க குழு ஒன்றையும் உருவாக்கினர்.







To get tune, contact your satellite installer, or contact us at this number 0033148353518

SATELITE DETAILS

| ASIA | EUROPE |
| --- | --- |
| SATELITE: YAMAL 49* East | SATELITE: Eutelsat 9* East |
| FREQ: 3958 | FREQ: 11842 H |
| S/R: 4124 | S/R: 27500 |
| FEC:3/4 | FEC:3/4 |

இலண்டன் தமிழ் கல்வியகம்

London Tamil Academy

நன்றே செய்க அதை இன்றே செய்க
தாயும் தம் மொழியும் தரணியில் பெரிதாம்

UK பல்கலைக்கழக அனுமதி நேர்முகத் தேர்வின் போது தமிழர்கள் தமிழ் மொழியில் GCSE க்கு குறையாத தரத்தில் OCR தமிழ் மொழி தராதரப் பத்திரம் பெற்றிருந்தால் மேலதிக மதிப்பெண்கள் பெற அரிய வாய்ப்பு.

7 வயது முதல் எல்லா வயதினர்க்கும் தமிழில் OCR தராதரப் பத்திர பரீட்சைக்கான பாடங்களும் பயிற்களும் நடைபெறுகிறது.

மற்றும் தமிழ் கலை பண்பாட்டுக் கற்கை நெறிகள், UK சாரதிகள் எழுத்துப் பரீட்சை பயிற்சி, UK யில் குடி உரிமை பெறுவதற்கான

ஆங்கில மொழி பரீட்சை பயிற்சி KS1, 2 & 3 ஆயவாள வினாவிடை வகுப்புகளும் இடம்பெறுகின்றன.

அனுமதிகள் வரையறுகப்பட்டவை

LTA-UK, 81 Knollmead, Surrey, KT5 9QR, UK
Tel:+44(0)208 3303424 / Fax:+44(0)2083303424
E-Mail: londontamilacademy@talktalk.net

UKயில் 21 Asset Languages ல் தமிழும் ஒன்றாக 2005 முதல் சேர்க்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தநிறுத்தம் உத்தியோகபூர்வமாக முடிவுக்கு வந்தது

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறுவதாக ஜனவரி 2ல் இலங்கை அரசு அறிவித்து உள்ளது. தலைநகர் கொழும்பில் கிளைமோர் தாக்குதல் இடம்பெற்று சில மணி நேரங்களிற்குள் அரசு இம்முடிவுக்கு வந்துள்ளது.

ஜனவரி2ல் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் ரட்ணசிறி பண்டாரநாயக்க, யுத்த நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதான தீர்மானத்தைக் கொண்டுவந்தார். அமைச்சரவை முழுமையாக தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தது. அதனைத் தொடர்ந்து இனிமேல் யுத்தநிறுத்தம் செல்லாது எனவும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து அரசாங்கம் வெளியேறுகிறது எனவும் பிரதமர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்ட புலம்பெயர் தமிழர் தக்சன், இது நல்ல ஜோக் என்றும் ஆனா தான் கேள்விப்பட்டு நாலு வருசம்மாச்சு என்றும் தெரிவித்தார்.

கியகொம்பனித் தெருவில் இராணுவத்தினர் பயணம் செய்த பஸ் வண்டிக்கு குறி வைக்கப்பட்டதாக கூறப்படும் கிளைமோர் தாக்குதலில் ஐவர் கொல்லப்பட்டனர் என்றும் 30 பேர் காயமடைந்து உள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. கொல்லப்பட்டவர்களில் இருவரும் காயமடைந்தவர்களில் பத்துப் பேர் இராணுவத்தினர் என்றும் கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனவரி 1ல் பா உ மகேஸ்வரன் கொல்லப்பட்டு 24 மணிநேரத்தில் கொம்பனித் தெருவில் கிளைமோர் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

2002 பெப்ரவரியில் கைச்சாதிடப்பட்ட இந்த ஒப்பந்தம் பெரும்பாலும் கைவிடப்பட்ட நிலையிலே வெறும் காகித ஒப்பந்தமாகவே இருந்து வந்தது. ஜேவிபி மற்றும் ஜேஎச்யு ஆகிய கட்சிகள் இவ்வொப்பந்தத்தை கிழித்தெறியும்படியும் விடுதலைப் புலிகளுடன் முழுமையான யுத்தத்தைத் தொடரும்படியும் அரசாங்கத்தை வற்புறுத்தி வந்தன. தக்க சமயத்தை பார்த்து இருந்தது போல் மாவீரர் தினத்தைத் தொடர்ந்து கொழும்பில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட 3 தாக்குதலைத் தொடர்ந்து அரசு ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறுவதாக அறிவித்து உள்ளது.

மேலும் விடுதலைப் புலிகளை உத்தியோகபூர்வமாக இலங்கையில் தடை செய்வது தொடர்பாகவும் அரசாங்கம் ஆலோசிப்பதாக அறிவித்து இருந்தது. தற்போது அரசாங்கம் ஒஸ்லோ உடன்பாடு காணப்பட்டு ஆறாவது ஆண்டு நெருங்கும் வேளையில் வெளியேறி உள்ளது.

இவையனைத்தும் சமாதானம் என்பது இலங்கைக்கு வெகு தொலைவில் இருப்பதையே கோடிகாட்டுகிறது.

அரசின் இம்முடிவு தொடர்பாக கருத்து வெளியிட்ட ஆரூரன், போர் நிறுத்த ஒப்பந்தம் பொதுமக்களின் காதில் பூச்சுற்றுவதற்காகப் பெயரளவிலேயெ இருந்தது என்ற வகையில் அலட்டிக் கொள்வதற்கு எதுவுமே இல்லை என்று தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில் அதிக பொர் நிறுத்தமீறல்களைச் செய்தவர்கள் புலிகளே என போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு கூறுவதை கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் பொது மக்கள் தான் பாவம் என்றும் தெரிவித்தார்.

இந்த அறிவிப்பு தமிழர் தாயகப் பகுதியில் போர் நடவடிக்கைகளை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.




சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸினால் முன்வைக்கப்பட்ட எந்தவொரு கோரிக்கையையும் இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளாமல் தங்கள் முதுகில் சவாரி செய்ததாக; சிறிலங்கா பாராளுமன்ற உறுப்பினரும் சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளருமான எம் ரி ஹசன் அலி, தெரிவித்தார். அண்மையில் லண்டன் வந்திருந்த ஹசன் அலி தமிழ் சமூகப் பிரதிநிதிகள் சிலரைச் சந்தித்து கலந்துரையாடிய வேளையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். இதனாலேயே முஸ்லீம் காங்கிரஸ் அரசுக்கு வழங்கிய ஆதரவை வரவுசெலவுத்திட்ட விவாதத்தின் இறுதிக் கட்ட வாக்கெடுப்பு முதல் நீக்கியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சர்வ கட்சிக் குழுவின் தீர்வுத் திட்டம் பற்றிக் குறிப்பிட்ட ஹசன் அலி அதனை வெளிப்படுத்தும் தைரியம் திஸ்ஸ விதாரணவுக்கு உள்ளதா என்ற சந்தேகத்தை வெளியிட்டார். திஸ்ஸ விதாரண அத்தீர்வுத் திட்டத்தை வெளியிடும் பட்சத்தில் அரசு ஈடாட்டம் காணும் எனவும் அதனாலேயே அது இழுத்தடிக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதுவரை காலமும் முஸ்லீம் காங்கிரஸ் அரசுக்கு ஆதரவு வழங்கியதில் எவ்வித நன்மையும் விளையவில்லை எனக் குறிப்பிட்ட ஹசன் அலி, ஜேவிபி, ஜேஎச்யூ போன்ற தீவிர இனவாத சக்திகள் சிறுபான்மை இனங்களை ஒடுக்குவதில் மிகவும் அவதானமாக இருப்பதாகக் குற்றம்சாட்டினார். கிழக்கில் முஸ்லீம்களுடைய காணிகளை பறிப்பதில் அரசு தீவிரமாகச் செயற்படுவதாகக் குற்றம்சாட்டிய ஹசன் அலி; 70 வீதமான தமிழ் பேசும் மக்களைக் கொண்ட அம்பாறை மாவட்டத்தின் தலைநகரில் தமிழர்களோ முஸ்லிம்களோ வர்த்தகத்தில் ஈடுபட முடிவதில்லை என்றும் அரச அலுவல்கள் பெரும்பாலும் சிங்கள மொழியிலேயே நடத்தப்படுவதாகவும் குற்றம்சாட்டினார்.

அம்பாறை, கல்முனை, பொத்துவில், சம்மாந்துறை ஆகிய தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கிய அம்பாறை மாவட்டத்தில், அம்பாறை தவிர்ந்த ஏனைய தொகுதிகளை உள்ளடக்கிய தமிழ்பேசும் மாவட்டம் ஒன்று உருவாக்கப்பட்டால் அது தமிழ், முஸ்லீம் மக்களுக்கு சாதகமான நிலையை உருவாக்கும் என்றும் ஹசன் அலி குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறுகையில் அவ்வாறான ஒரு மாவட்டம் உருவாக்கப்பட்டால் அதில் முஸ்லீம்கள் பெரும்பான்மையினராக வந்துவிடுவார்கள் என்பதால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அதில் மௌனம் சாதிப்பதாகவும் குற்றம்சாட்டினார்.

கிழக்கில் முஸ்லீம்களின் பாரம்பரிய காணிகள் பல்வேறு வழிகளிலும் தீவிரமாகப் பறிமுதல் செய்யப்படுவதாகக் குறிப்பிட்ட ஹசன் அலி வடக்கு கிழக்கு இணைந்த மாகாணங்களே தமிழ் பேசும் மக்களுக்கு பாதுகாப்பானது எனக் குறிப்பிட்டார். கிழக்கு மாகாண மக்களிடம் வாக்கெடுப்பு நடத்தி தீர்மானிக்கும் வரை வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்திருக்க வேண்டும் என்பதே முஸ்லீம் காங்கிரஸின் நிலைப்பாடாக எப்போதும் இருந்தது என்றும் அவர் அப்போது சுட்டிக்காட்டினார்.

சிறுபானமை இனங்களிடையேயான ஒற்றுமை பற்றி குறிப்பிடுகையில் தமிழ் முஸ்லீம் சமூகங்கள் தமக்குள் பிளவுபட்டு நிற்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

டிசம்பர் 30ல் இடம்பெற்ற இச்சந்திப்பில் தமிழ் முஸ்லீம் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.




மூன்று ஆண்டுகளுக்கு முன் சுனாமியில் உயிரிழந்த அனாமிகா சுகுமார் (14) ரின் அஞ்சலி நிகழ்வு லண்டன் வூட்போட் கிரீனில் டிசம்பர் 29ல் இடம்பெற்றது. அனாமிகாவை நினைவு கூரும் இந்நிகழ்வில் சுனாமி புகைப்படங்கள் காட்சிக்கு வைக்கப்படுவதுடன் கவிதைகள், சிறு கதைகள், படங்கள் கொண்ட சிறுநூலும் வெளியிடப்பட்டது.

மட்டக்களப்பு தேவாலயத்தில் நிறைந்த கூட்டத்தில் ஓர்கன் வாசித்துக் கொண்டிருக்கும் போது எழுந்து வந்த அலை தாக்கியது என்றார் அனாமிகாவின் தாயார் பிரேமிளா சுகுமார். இரண்டாவது அலை வந்து எங்களை பிரித்து தூரத் தூர வீசியது என்று கூறிய அவர் அனாமிகாவை பிடித்து வைத்திருக்க முடியவில்லை என தாங்க இயலாத வேதனையுடன் தெரிவித்தார். மூன்றாவது அலை மரண அலையாக வந்து சென்றதையும் அவர் கூறினார்.

பாலசுகுமார் தம்பதிகள் 2006ல் லண்டன் வந்தடைந்தனர். அவர்களுக்கு இப்போது சாம் என்ற ஒன்றரை வயதுக் குழந்தை உண்டு.

அனாமிகா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருப்பதாக நண்பர்



ஒருவர் தெரிவிக்க இவர்களும் தேடிச் சென்றனர். இவர்களுக்கு அதிஸ்டம் கைகொடுக்கவில்லை. குளமாக தேங்கி இருந்த தண்ணிக்குள்ளும் சேற்றினுள்ளும் சில உடல்கள் இருந்தது. அனாமிகாவும் முகம்குப்பிற கிடந்தா என்ற பிரேமிளா சுகுமார் அந்த உணர்வை யாராலும் உணர முடியாது என்று கண் கலங்கினார். அனாமிகா தங்களைவிட்டு பிரிக்கப்பட்டதை தங்களால் இன்னமும் நம்ப முடியவில்லை என்கின்றனர் சுகுமார் தம்பதிகள்.

அனாமிகாவின் நினைவு நிகழ்வு முன்னாள் சட்டத்தரணி சிவபாலன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மு நித்தியானந்தன், என் செல்வராஜா, அங்கையற்கன்னி ஆகியோர் அஞ்சலி உரைகளை வழங்கினர். நிகழ்வின் இறுதியில் பாலசுகுமார் மகளின் நினைவுகளைப் பகிர்ந்து கொண்டதுடன், மகளின் நினைவாக மேற்கொள்ள உள்ள திட்டங்கள் பற்றி குறிப்பிட்டார். மட்டக்களப்பில் உரு நூலகம் அமைப்பது, சுனாமியில் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு உதவுவது, தமிழர்களின் கலை வடிவங்களை வளர்த்தெடுப்பது என் அவர் சில திட்டங்களை முன் வைத்தார்.

அநாமிகா நிதியம் 2005, ஏப்பிரல் 17ல் அநாமிகாவின் 15வது பிறந்த தினத்தன்று ஆரம்பிக்கப்பட்டது. அநாமிகாவின் மனித நேயத்தை வெளிப்படுத்தும் இயல்பை கருத்தில் எடுத்து அவரது பெற்றோர் இந்நிதியத்தை ஏற்படுத்தி உள்ளனர். இந்நிகழ்வில் புத்தக வெளியீட்டின் மூலம் சேர்க்கப்படும் நிதி அநாமிகா நிதியத்திற்கே வழங்கப்படும் என பாலசுகுமார் அங்கு தெரிவித்தார்.

**உண்மைகள் உறங்குவதில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெனாசிர் பூட்டோ: மேற்குலகும் அது கூறும் ஜனநாயகமும்

கடந்த 27ம் திகதி ராவல்பின்டியில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த பெனாசிர் பூட்டோ (டீநயெணசை டீாரவவழ) சுட்டுக்கொல்லப்பட்டார். பெனாசிரை சுட்ட கையுடன் கொலையாளி ஏற்படுத்திய தற்கொலை குண்டு வெடிப்பில் 20க்கும் மேற்பட்டவர்கள் பலியாகி உள்ளார்கள். முசராப்பின் அரசாங்கம் அல்கைடாவின் பைதுள்ளா முஸ்சுத்தை குற்றம்சாட்ட, அனைத்து மேற்கத்தேய ஊடகங்களும் மீண்டும் ஒரு ரவுன்ட் அல்கைடா வசைபாடி ஓய்ந்துள்ளன. பாக்கிஸ்தான் அல்கைடாவின் பேச்சாளர் இக்கொலையை தாம் செய்ததாக அறிவித்திருந்தாலும், இக்கொலைக்கு பின்னால் இருக்கும் அரசின் பங்கை மூடி மறைக்க முடியவில்லை. குண்டுவெடிப்பின் அதிர்வில் பெனாசிரின் தலை வாகனத்தில் மோதியதாலேயே அவர் இறந்தார் என்று அவர் ஏதோ தற்கொலை செய்து கொண்டதுபோல் அரசு செய்திகள் வெளியிடுகிறது.



பாக்கிஸ்தான் மக்கள் கட்சியின் (PPP- Pakistan Peoples Party) தலைவியான அவரை பாக்கிஸ்தானுக்கு திரும்பி போகும்படி தூண்டியதில் இங்கிலாந்து அரசாங்கத்துக்கு முக்கிய பங்குண்டு. பெனாசிர் திரும்பி சென்று, தேர்தலில் நின்று வெற்றி பெற்று, தமக்கு தேவையான அனைத்து சலுகைகளையும் வழங்குவதை, பாக்கிஸ்தானுக்கு ஜனநாயகம் கொண்டுவருவதாக பார்த்தனர் மேற்கத்தேய அரசுகள்.



முசராப்பின் அரசு தமது செல்வாக்கை மக்கள் மத்தியில் இழந்ததும், பெனாசிர் முசராப்புக்கும் மேலாக அதிக சலுகைகளை மேற்குலக நாடுகளுக்கு வழங்க முன்வந்ததுமே ஆதிக்க சக்திகளுக்கு பெனாசிர் மேலான கரிசனை ஏற்பட முக்கிய காரணம். இதுவரை காலமாக இராணுவ ஆட்சி செய்து பெரும் ஜனநாயக மறுப்புகள் செய்து வந்த முசராபை தமது முதுகில் தூக்கித் திரிந்த மேற்கத்தேய அரசுகள் உடனடியாக அவரை கீழே தள்ளிவிட விரும்பவில்லை. மக்கள் அண்மையில் கிளர்ந்து எழுந்து போராடியிருக்கா விட்டால் அவர்கள் தொடர்ந்தும் முசராபுக்கு ஆதரவை வழங்கியிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. வழக்கறிஞர்கள், நீதிபதிகள், டாக்டர்கள் முதற்கொண்டு தொழிற் சங்கங்கள் உட்பட பல்வேறு தரப்பு மக்களும் தெருவில் இறங்கி போராட தயாரானது ஆதிக்க சக்திகளுக்கு கிலி ஏற்படுத்தியது ஆச்சரியமானதல்ல.

போதாக்குறைக்கு வளர்ந்து வரும் இஸ்லாமிய அடிப்படைவாதம் - குறிப்பாக அணுஆயுத பலம் இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் கையில் போய்விடுமோ என்ற பயம் இவர்களை தொடர்ந்து ஆட்டி வருகிறது. இந்த நிலையில் முசராபை கேள்விகேட்க இவர்கள் தயாராக இல்லை. அதே தருணம் தமது இராணுவத்தை பாக்கிஸ்தானில் நிலைநாட்ட தொடர்ந்து முயற்சித்து வரும் அமெரிக்காவுக்கு முசராப் தொடர்ந்து முட்டுக்கட்டையாக இருந்து வந்துள்ளார். அதற்கு தான் அனைத்து சலுகைகளையும் வழங்குவதாக பெனாசிர் அறிவித்தது அவரை அமெரிக்காவின் முதல்தர நண்பராக்கியதும் அல்கைடாவின் முதல்தர எதிரியாக்கினதும் ஆச்சரியமான விசயமில்லை.

முசராபின் அரசு தன்னை கொலை செய்யும் முயற்சியில் இருப்பதாக பெனாசிர் தொடர்ந்து குற்றம்சாட்டி வந்துள்ளார். 150க்கும் மேலான உயிர்களை பலிகொண்ட கடந்த அக்டோபர் 18 தற்கொலை தாக்குதலில் இருந்து தப்பிய கையுடன் அவர் அரசாங்கத்தையே குற்றம்சாட்டி இருந்தார். அவரது வீட்டை இராணுவம் முற்றுகையிட்டு காவலில் வைத்திருந்த பொழுது பெனாசிர் பி பி சி ரேடியோவுக்கு வழங்கிய பேட்டியில் அரசை கடுமையாக சாடியிருந்தார். அதே நிகழ்ச்சியில் பெனாசிருடன் பங்கேற்ற இங்கிலாந்து வெளிவிவகார அமைச்சர் டேவிட் மிலபான்ட் முசராபுக்கு தமது முழு எதிர்பையும் தர மறுத்துவிட்டார். முசராப் உடனடியாக அரச பொறுப்பில் இருந்து விலகத்த வேண்டும் என்று பெனாசிரும் நிகழ்ச்சி நிருபரும் மீண்டும் மீண்டும் கேட்டும் பதில்தர மறுத்துவிட்டார் மிலபான்ட். ஜோர்ஜ் புஸ் முசராப் தமது உடை மாற்ற வேண்டும் என்று கோர முஸரப் உடை மாற்றிய கதை எமக்கு தெரியும். பாக்கிஸ்தானுக்கு ஜனநாயகம் கொண்டுவரும் இவர்தம் அக்கறையான நடவடிக்கைகள் இவை.



இன்று பாக்கிஸ்தான் இராணுவத்தின் ஆதரவின்றி பாக்கிஸ்தானில் யாரும் அரசமைப்பது என்பது நடக்ககூடிய காரியமாக தெரியவில்லை. பாக்கிஸ்தான் உருவான காலம் தொட்டு இந்நாடு இராணுவ ஆட்சியில் இருந்த காலமே அதிகம். இராணுவத்துக்குள் பல்வேறு கிளைகள் பல்வேறு அரசியல் நோக்கில் செயல்படுகின்றன. இருப்பினும் முழு பாக்கிஸ்தானும் இராணுவத்தினதோ அரசினதோ கட்டுப்பாட்டில் இல்லை. உதாரணமாக வடக்கு பிரதேசத்தில் இஸ்லாமிய அடிப்படை வாத குழுக்கள் பல்வேறு பகுதிகளை தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். போதாக்குறைக்கு அரசாங்கத்தின் பல்வேறு அமைச்சுகள் தனித்து இயங்குகின்றன. ஒன்றோடு ஒன்று தொடர்புபடாத வகையில் தனிப்பட்ட அரசியல் நோக்கோடு வெவ்வேறு அரச அமைப்புக்கள் தங்களது சொந்த நலன்சார் அரசியலுடன் இயங்குகின்றன. ஊழலும் சுரண்டலும் உச்சக் கட்டத்தில் இருக்கும் பாக்கிஸ்தானில் மக்கள் வறுமையில் வாடுவது பற்றி எந்த ஆதிக்க சக்திகளும் கவலைப்படவில்லை. இராணுவத்தின் அரசியல் பலத்தை குறைத்து குறைந்தபட்ச ஜனநாயகத்தையாவது கொண்டுவருவதற்கு யாரும் தயாராக இல்லை.

பெனாசிருக்கோ PPPக்கோ இராணுவத்தின் முழு ஆதரவு ஒருபோதும் இருக்கவில்லை. மேற்குலக அரசுகளும் பெனாசிரை நம்பும் அளவுக்கு PPPயை நம்ப தயாரில்லை. 60 களில் ஏற்பட்ட இடதுசாரி எழுச்சியின் விளைவாக உருவாகிய இக்கட்சிக்குள் இன்றும் பல்வேறு இடதுசாரி போக்குகள் உண்டு. இந்நிலையில் பெனாசிரின் இறப்பு பலத்த சிக்கல்களை தோற்றுவித்துள்ளது.

பெனாசிருக்கோ அல்லது அவரது குடும்பத்துக்கோ பெரும்பான்மை மக்கள் ஆதரவு இன்று இல்லை. அவர்கள் அரசாட்சியில் இருந்தபோது செய்த அநியாயங்களை மக்கள் இன்னும் மறந்துவிடவில்லை. பெனாசிரின் கணவர் 10வீதக்காரர் என்று செல்லமாக அழைக்கப்பட்டவர். 10வீதம் லஞ்சம் வாங்கிக்கொண்டு எல்லாவித ஊழல்களையும் அனுமதித்தவர் அவர்.

இருப்பினும் பெனாசிரின் குடும்ப உறுப்பினர் ஒருவரையே இக்கட்சிக்கு தலைவராக்க முயற்சி நடக்கும் என்று நாம் நம்பலாம். பூட்டோவின் பெயரை வைத்து அரசியல் செய்ய விரும்பும் PPPயின் முன்னனி தலைவர்கள் மக்களின் அதிருப்தி பற்றி அவர்களின் போராட்டம் பற்றி எந்த அக்கறையும் அற்றவர்களாகவே இருக்கிறார்கள்.

PPPயை ஆரம்பித்த பெனாசிரின் தந்தை அலி பூட்டோ 1979ல் தூக்கில் இடப்பட்டதை தொடர்ந்து இக்குடும்பம் சந்திக்கும் நாலாவது கொலை இது. இதன்முலம் ஏற்படும் அனுதாப அலையை பாவிக்க வரும் தேர்தலில் உபயோகிக்க - கட்சி முயற்சிக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதற்கு இன்னுமொரு பூட்டோவை கட்சிக்கு தலைமையாக்குவதில் முன்னனி உறுப்பினர்கள் வெற்றி கண்டு உள்ளனர். டிசம்பர் 30ல், பெனாசீரின் 19 வயது மகன் பிலாவால் பூட்டொ PPPயின் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளார்.

எதிர்வரும் வரும் தேர்தல் ஜனநாயக முறைப்படி நடக்காது என்பதும், கள்ள வாக்குகளும் ஊழலும் நிரம்பி வழியும் இத்தேர்தலின் பின் பாக்கிஸ்தானுக்கு ஜனநாயகம் வந்துவிட்டதாக மேற்குலக ஊடகங்கள் கூவப்போவதும் எமக்கு தெரிந்ததே. இது பாக்கிஸ்தானுக்கு எந்த மாற்றத்தையும் கொண்டுவர போவதில்லை.

சிந்து பிரதேசம் உட்பட பாக்கிஸ்தான் எங்கும் இன்று கிளர்ந்தெழுந்துள்ள மக்களை ஒன்று திரட்டி தற்காப்பு கமிட்டிகளை உருவாக்கி ஒரு மக்கள் அமைப்பை கட்டி எழுப்புவதன் மூலம்தான் இராணுவத்தையும் இஸ்லாமிய அடிப்படை வாதத்தையும் எதிர்கொள்ள முடியும். இதன்மூலம் தான் பாக்கிஸ்தானுக்கு நியாயமான ஜனநாயகத்தை கொண்டுவர முடியும்.



**பாகிஸ்தான் சில தகவல்கள்:**

Population: 161.1 million (UN, 2005)

Capital: Islamabad

Largest city: Karachi

Major languages: English, Urdu, Punjabi, Sindhi, Pashto, Balochi

Major religion: Islam

Life expectancy: 63 years (men), 63 years (women) (UN)

Main exports: Textile products, rice, cotton, leather goods

GNI per capita: US $690 (World Bank, 2006)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெகோவாவின் சாட்சியங்களும் தமிழ் சொலிசிற்றர்மாரும்


ஆர் புதியவன்

தவிச்ச முயல் அடிப்பதில் எமக்கு நிகர் நாமே. மேற்சொன்ன இந்த இரண்டு பிரிவினரும் தவிச்ச தமிழரை அடிப்பவர்கள். தங்களின் சுய நன்மை கருதி எப்டி வேண்டுமானாலும் வறுக வேண்டும் என்பதில் இவர்களுக்கு நிகர் யாரும் கிடையாது.

பத்திரிகைகளிலும் சரி வெனொலி தொலை காட்சிகளிலம் சரி வருகிற சொலி சிற்றர் வியாபாரிகளின் விளம்பரங்களை கவனிப்பவர்களுக்கு ஒன்று புரியும். இங்கிலாந் தில் இருக்கிற தமிழர்களின் எந்தப் பிரச்சனை என்றாலும் இவர்களால் தீர்த்து வைத்து விட முடியும். அண்மையில் நான் பார்த்த விளம்பரம் ஒன்றில் வீடு வாங்க வேணுமா விக்கவேணுமா திருப்பி அனுப்பப்போறார்களா வைச்சிருக்கப் போறார்களா? பாஸ் போட் பிரச்சனையா எது வானானலும் அண்ணா எண்டு அழைக்கட்டாம்.

நல்ல காலம் மனைவி ஓடிட்டாளா இல்லை ஓட வைக்க வேணுமா பிள்ளை இருக்கா இல்லை புள்ளை தரவேணுமா நீங்கள் வேலைக்கு போன பிறகு மனைவி தனியா இருந்தா கூட இருப்பதற்கு ஆள் வேணுமா அண்ணா என்ற அழையங்கோ என்று சொல்லாத வரைக்கும் தமிழ் கிளையன்ஸ் தப்பினர்.

இங்கே பார்க்க வேண்டிய விடயம் இன்னொன்று இருக்கிறது. இந்தச் சொலிசிற்றர் மாருக்கு விளங்கியிருக்கு கொஞ்சக் காலத்துக்கு முன்னர் வந்த ஆக்களிட்டை வறுக முடியாது தம்பிமாரை குறிவைக்கிறது தான் சரி என்று. இல்லை என்றால் இவரை எல்லாரும் அண்ணா எண்டு கூப்பிட்டா என்ன தலைவர் எண்டு கூப்பிடுறியள் தானே என்ற நிலைப்பாட்டுக்குக் கூட இருக்கலாம்.



காணி பூமி விற்று ஓட்டுக்குழு, ஒட்டாத குழு (விளக்கம் வேணும் எண்டா தேசம்நெற் பாருங்கோ நீங்கள் புலியோட நிண்ணடா ஒட்டுக்குழு லிஸ்றிலை இருந்து எடுப்பினமாம் எண்டு சொல்கிறது ஒரு குரல்) எல்லாக் குழுக் களிட்டை யும் இருந்து தப்பி நெருப்பு இணையத்தளத்தின் படி (வன்னிக் குழு உட்பட) இங்கிலந்து வந்தா சொலிசிற்றர் குழு வீசா விண்ணபத்திற்கு காசு பிறகு அதே விண்ணப் பத்தை திருப்பி அனுப்பக் காசு எண்டு வெருட்டாம காசு பறிக்கிற தொழில் இங்கையும் தொடர்வது வியப்பக்குரியது அல்ல.

அண்மையில் கிங்ஸ்ரன் பகுதியில் இருக்கும் ஒரு சொலிசிற்றர் (மன்னிக் கவும் அவர் சொலிசிற்றர் இல்லையாம்.) 4000 பவுண்ஸ் வாங்கி கையெ முத்து வைக்கப் போன இடத்தில் பிடிபட்ட ஒருவரை மீண்டும் வெளியில் எடுத்து விடுவதாகச் சொல்லி இருக்கிறார். ஆனா அவரை அன்றிரவே இலங்கைக்கு திருப்பி அனுப்பி விட்டார்கள்.

சட்டம் என்று வரும்போது அது ஒரு பரந்த பிரிவாகிறது. அதிலே ஒரு பிரிவுதான் குடிவரவு (அடைக்கலம் கோரும் பிரிவு) இது பற்றி எதுவும் தெரியாமல் அண்ணா என்று சொல்லுங்கள் என்பதும் நிர்கதியாக நிற்றும் நிலைக்கு தமது கிளையன்சை உருவாக்கி விட்டு அது செய்கிறேன் இது செய்கிறேன் என்று வறுகுவதும் இங்கு இயல்பாகப் போய்விட்டது.

எந்நக் குடும்பத்தில் உறவுச் சிக்கல் ஏற்படுகிறது யார் யாரெல்லாம் பலவீனம் அடைந்து போயிருக்கிறார் கள் என்று அடையாளம் கண்டு எங்கட போதகர் உங்கட தலையிலை கைவைச்சார் எண்டா எல்லாப் பிரச்சனையும் தீரும் எண்டு ஆள் பிடிக்கிற மாதிரி பாஸ்போட்டா? திருப்பி அனுப்பப் போறாங்களா? உடனே அண்ணா என்று அழையுங்கள் என்று கூறும் சில சொலிசிற்றர் மாருக்கும் இடையில் பெரிய வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்த அப்பாவி அகதிகளின் நிலையைப் பாருங்கள். மட்டக்களப்பிலை இருந்தா கருணா குழு பிடிக்குது பிள்ளையான் குழு மடக்குது. தப்பி ஓடி வவுனியா போனா புளட் அடிக்குது ஈபிடிபி உதைக்குது. சரி வன்னியிலை போய் இருப்பம் எண்டு போனா புலி துரத்தி துரத்தி பிடிக்குது. கலியாணம் கட்டினா மட்டும்தான் விடுவாங்களாம். இப்பிடித் தெரிஞ்சிருந்தா கனபேர் ஒழுங்க இருந்திருபினம். பொம்பிளை கிடைச்சிருக்குமே. ஆனா கட்டினவையையும் தூக்கிக் கொண்டு போன கதையும் இருக்குது.

சரி இதெல்லாம் வேண்டாம் லண்டனிலை போய் நின்மதியா இருக்கலாம் எண்டு வந்தா சொலிசிற்றர் மார் ஒரு பக்கம் ஜெகோவா ஒரு பக்கம். போன வாரம் ஒரு நண்பர் ருட்டிங்கிலை இருக்கிற செலிசிற்றர் விசயம் தெரியாத ஆளாம் ஈஸ்ராமிலை இருக்கிறவர் உடனே வீசா எடுத்துக் குடுக்கிறாராம் என்று பைலை வாற்கிக் கொண்டு கிளம்பிறார். ஈஸ்ராம் சொலிசிற்றர் அவிக்கிறார் எண்றது தெரியாமல். அதெப்படி ஒரு சொலிசிற்றருக்கு ஏலாதது மற்றவருக்கு ஏலும். கட்டி இழுக்கிற சாமான் எண்ணடா பரவாயில்லை. ஈஸ்ராம் சொலிசிற்றர் கொஞ்சம் தையிரிய சாலி நல்லா இழுப்பார் எண்டு நம்பலாம். சட்டம் என்று வரும்போது எனக்கு ஒண்டுமே விளங்குதில்லை. ஜெகோவா காரரிடடைதான் கேக்க வேணும். அந்தப் போதகர் கைவைச்சா (நான் ஆம்பிளை எண்டதாலை பரவாயில்லை) எல்லாம் தெரியும் எண்டு சொல்லிறாங்கள். அவருக்கு அந்தமாதிரி எண்ணம் இல்லாட்டா உருமுறை பொய் கேட்டுப் பாக்கலாம்.

49 வயது நிரம்பிய ருட்டிங் பகுதியில் இருக்கும் இரண்டு பிள்ளைகளின் தந்தை சொன்னார், அவர் இருவரை 6880 பவுண்ஸ் வரை செலவு செய்து தன்னுடைய வீசா பிரச்சனைக்கு ஒரு முடிவும் இல்லையாம். அவர் சொன்னார். சொலிசிற்றர் மாருக்கு ஒண்டு சொல்லிறன் தம்பி. உவங்கள் கொழும்பிலை இருக்கும் போது சிங்களக் காடையர் (தமிழ் காடையர் தாருக்குள்ளை போடுறத கிடையாது ரயர் தான்) கொதி தாருக்குள்ளை போட்டு எடுக்காமல் தப்பிட்டீங்களாம் ஆனா ருட்டிங் முத்துமாரி அம்மன் உவங்களை நரகத்துக்க அனுப்பி தாருக்கை போட்டு எடுக்காம விடமாட்டாவாம். ஜெகோவாக் காரரை எங்கை போட்டு எடுக்கலாம் யேசு நாதருக்குத்தான் வெளிச்சம்.

# கருணாவை இறுக்கும் பிரித்தானிய சட்டங்கள்

பிரித்தானிய சட்டத்தின் கரங்கள் கேணல் கருணாவை இறுக்க ஆரம்பித்து உள்ளது. நவம்பர் 2ல் பிரித்தானியாவில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள கேணல் கருணா மீது யுத்தக் குற்றங்கள் தொடர்பாக குற்றப் பத்திரிகை பதிவு செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளது. சர்வதேச சட்டங்களுக்கு அமைய கருணாவை சர்வதேச நீதி மன்றத்தின் முன் நிறுத்த யுத்தக் குற்றங்கள், சித்திரவதை, ஆட்கடத்தல் தொடர்பான ஆதாரங்களை Crown Prosecution Service - CPS ஆராய்கிறது. CPS, கருணா மீது குற்றத் தாக்கல் செய்வதற்கான ஆதாரங்களை உறுதிப்படுத்திய பின்னரேயே ஸ்கொட் லன்ட் யாட் கருணா மீது குற்றங்களைப் பதிவு செய்யும்.

டிசம்பர் 18ல் இலங்கை உயர் ஸ்தானிகர், பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு கருணாவிற்கு diplomatic passport வழங்கப்பட்டது தொடர்பாக விசாரிக்கப்பட்டு உள்ளார். இதனை வெளிவிவகார அமைச்சு அலுவலகம் உறுதிப்படுத்தி உள்ளதாக பிரித்தானியாவின் தேசிய நாளிதலான ரைம்ஸ் பத்திரிகையின் இணையச் செய்தி உறுதிப்படுத்தி உள்ளது.

இதற்கிடையே கருணாவை வெளிநாட்டுக்கு அனுப்ப திட்டமிட்ட கே ரி ராஜசிங்கம் இலங்கை உயர்ஸ்தானிகர் சேனுகா செனவீரத்னவை மாற்றும்படி கேட்டிருந்தமை தெரிந்ததே. தற்போது ஏசியன் ரிபியூன் இணையச் சஞ்சிகையில் எழுதிவரும் வோல்ரர் ஜெயவர்த்தனே Sri Lankan High Commission இன் Minister / Counsellor (Information), ஆக நியமிக்கப்பட்டு உள்ளாதக சிறிலங்கா கார்டியன செய்தி வெளியிட்டு உள்ளது. அரசசார்பு பிரச்சாரங்களுக்கும் கருணா - பிள்ளையான் மோதல் மற்றும் கருணாவை வெளியேற்றியது தொடர்பில் கே ரி ராஜசிங்கத்தின் ஊடகத் திட்டங்களுக்கு பல்லாயிரம் டொலர் நிதியை அரசு வழங்கத் தயாராக இருந்தமை தெரிந்ததே.



இப்போது பிரித்தானிய சட்டத்தின் பிடியில் உள்ள கேணல் கருணா

இவ்வாண்டு மே 2ல் பிரித்தானிய பாராளுமன்றத்தில் இடம்பெற்ற இலங்கை மீதான விவாதத்தில், வெளிவிவகார அலுவலக அமைச்சர் ஹிம் ஹொவெல்ஸ், “சட்டத்திற்கு புறம்பான கொலைகள் அட்கடத்தல்கள், மிரட்டல்கள், சிறார்களை இயக்கத்தில் சேர்த்தல் போன்றவற்றிற்கு கருணாவும் அவரது குழுவும் பொறுப்பாளிகள்” எனத் தெரிவித்து இருந்தார்.



பிரித்தானிய சட்டத்தின் பிடியில் சிக்கித் தண்டனை பெற்ற அப்கானிஸ்தான் war lord, Faryadi Zardad

சர்வதேச மனித உரிமைகள் தினமான டிசம்பர் 10ல் டட்லி சேனநாயக்காவின் 10வது நினைவுப் பேருரையை வழங்கிய பதவி உயர்வு பெற்றுச் செல்லும் இலங்கைக்கான பிரித்தானிய உயர் ஸ்தானிகர் சில்கொட் வழங்கிய உரையில் “இராஜதந்திரத்தின் பழைய பள்ளி விதிகள் இங்கு நடைமுறைப் படத்தப்படுவதில்லை.... பொய்யாக எதென்ஸின் இராஜதந்திரி என ஒருவர் கூறுவது அறியப்பட்டால் அவருக்கு அங்கு மரண தண்டனை விதிக்கப்படும். அதிஸ்டவசமாக ஒரு இலங்கைப் பிரஜை நவீன பிரித்தானியாவில் தடுத்து வைக்கப்பட்டு உள்ளார். இராஜதந்திரக் கடவுச்சீட்டில் பொய்யான அடையாளத்துடன் பழைய நிலையில் வந்திருந்தால் இவருக்கான தண்டனை மிகக் கடுமையாக இருந்திருக்கும்” என்று தெரிவித்தார். சில்கொட் கருணாவையே குறித்த போதும் தனது உரையில் வாய் தடுமாறியும் அப்பெயரை உச்சரிக்கவில்லை.

சில்கொட் தனது உரையில் 1998ல் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட சிலி நாட்டின் முன்னாள் அதிபர் பினசேயையும் சுட்டிக்காட்டினார். பினசே போக்லன்ட் யுத்தத்தில் பிரித்தானியாவுக்கு மிகவும் ஆதரவாக இயங்கியவர். இவருக்காக மார்கிரட் தட்சர் முழு அளவில் போராடினார். ஆனால் சர்வதேச சித்திரவதைக் குற்றங்களுக்காக ஒரு நாட்டின் தலைவராக இருந்த ஒருவரை இன்னொரு நாட்டில் விசாரிக்கும் இடத்து அவருக்கு சட்ட விலக்கு அளிக்க முடியாது என பிரித்தானிய பிரபுக்கள் சபை தீர்ப்பளித்தது. இத்தீர்ப்பு சர்வதேச யுத்தக் குற்றங்கள் தொடர்பில் ஒரு மைல்கல் என்றே குறிப்பிட வேண்டும்.

அப்கானிஸ்தான் war lord, Faryadi Zardad இன் வழக்குப் பற்றியும் சில்கொட் தனது உரையில் சுட்டிக்காட்டினார். (தேசம்நெற்றில் ஏற்கனவே இவ்வழக்குப் பற்றி குறிப்பிடப்பட்டு உள்ளது.) சர்வதேசச் சட்டங்கள் அப்படியே ஸ்தம்பித்து நின்று விடவில்லை எனக் குறிப்பிட்ட சில்கொட் பிரித்தானிய நீதிமன்றங்கள் பலம்பெற்று வரவதாகவும்

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

**உண்மைகள் உறங்குவதில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமி: மூன்று ஆண்டுகள்

~ த ஜெயபாலன் ~



குழந்தையைப் போலே
அலைக்கரம் கொண்டு
குறும்புகள் செய்தாய் !
அன்னையைப் போலே
மயங்கிக் கிடக்க
மணல் மடி தந்தாய் !
வள்ளல் போலே
வாரி வழங்கி
வளமைகள் செய்தாய் !
அரக்கனைப் போலே
கொலை முகம் காட்டி
ஏன் கொன்றாய் கடலே ???

விஜி (லண்டன்)

இந்தோனேசியா முதல் கிழக்கு ஆபிரிக்கா வரை தாக்கிய சுனாமி இந்து சமுத்திரத்தில் உள்ள 12 நாடுகளைத் தாக்கி இலங்கையில் 40,000 பேர் உட்பட 230,000 உயிர்களைக் காவு கொண்டது. டிசம்பர் 26, 2004 நாம் வாழ்ந்த உலகின் வரலாற்றில் இடம்பெற்ற மிகப்பெரிய மனித அவலம். ஆனால் இன்று 3 ஆண்டுகள் கடந்து விட்டது. ஆனால் தம் அன்புக்குரியவர்களை இழந்தவர்கள் துயரம் எல்லையற்றது. சுனாமியில் சிக்காதவர்களுக்கு அது வரலாறாகிப் போனாலும் அதில் தம் அன்புக்கும் பாசத்திற்கும் உரியவர்களைப் பறிகொடுத்தவர்களுக்கு அவர்களின் வாழ்க்கையில் ஒரு பகுதி. என்றுமே மறுக்க முடியாத பகுதி. அவர்களின் எதிர்காலத்துடனும் நிழலாகத் தொடரும் பகுதி.

இந்த அவலத்தில் இருந்து மீள முழு உலகமும் அப்படிக் குறிப்பிடும் போது அரசுகளை மட்டும் குறிப்பிடவில்லை உலக மக்களும் மனமுவந்து வழங்கினர். 13.6 மில்லியன் அமெ. டாலர் நிதி பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு வழங்கப்பட்டது. இப்போது இந்த நிதி வற்றிக் கொண்டு வருகிறது. சுனாமியின் வேகத்துடன் கடைவிரித்த சர்வதேச அரச சார்பு மற்றும் அரச சார்பற்ற பொது நிறுவனங்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிக்கான திட்டங்கள் பூர்த்தியாகி விட்டதாகவும் மீதம் உள்ளவையும் வெகு விரைவில் பூர்த்தியாகிவிடும் என்றும் அறிவித்து உள்ளன. அவர்களது சுனாமி மூன்றாவது ஆண்டு அறிக்கை சுனாமியின் அவலம் பெரும்பாலும் தீர்க்கப்பட்டு விட்டதாகவே தெரிவிக்கிறது.

இந்தோனேசியாவை அடுத்து பெரும் அழிவை ஏற்படுத்திய இலங்கையில் "the picture is pretty good," என்கிறார் ஐநா அதிகாரி டேவிட் இவான்ஸ். இதே நிலைப்பாட்டையே உலக வங்கியும் "Sri Lanka's Tsunami Reconstruction Program, the implementation effectiveness and impact of the International Development Association - financed Tsunami Emergency Reconstruction Program (TERP) have been satisfactory" கூறுகிறது இவ்வாறு ஒவ்வொரு பொது நிறுவனமும் சுனாமி நிதியாண்டு அறிக்கையை சமப்படுத்தி தங்கள் சேவையை அளந்துள்ளனர். பட்டியலிட்டு உள்ளனர். கூடவே வடக்கு கிழக்கில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே யுத்தம் நடைபெறுவதால் அங்கு நிவாரணம், புனரமைப்பு, மீள்கட்டுமானம் என்பனவற்றில் தாமதம் ஏற்படுகின்றது என்ற வரியையும் இவர்கள் மறக்காமல் இணைத்துக் கொள்வார்கள். அதை மறுப்பதற்கும் இல்லை.

ஆனால் "சுனாமி புனரமைப்பு வேலைகள் மக்களை சுரண்டுவதற்கான வாய்ப்பாக பயன்படுத்தப்பட்டது" (the tsunami relief work is used as an opportunity to exploit people) என தமிழகத்தில் Voices from the Margins என்ற சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் குறைகளைக் கேட்கும் மக்கள் மன்றத்தின் தீர்ப்பில் நீதிபதி எச் சுரேஸ் தெரிவித்தார். இரு நாட்கள் இம்மக்கள் மன்றம் இடம்பெற்றது. தமிழ்நாடு பாண்டிச்சேரி மீனவர்கள் மூன்று ஆண்டுகளுக்குப் பின்னும் தமக்கு ஏற்பட்ட கஸ்டங்களை யூரிகளின் முன் வைத்தனர். யூரிகள் குழுவில் Justice Mr. H. Suresh (retired judge, Mumbai High Court) , Dr. Asghar Ali Engineer (eminent social activist and winner of Right to Livelihood award), Dr. K.N.Panikkar (historian and former vice Chancellor, Sankaracharya University) and Dr.Yasodha Shanmugasundaram (former vice Chancellor, Mother Teresa Women's University) ஆகியோர் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

டாக்டர் யசோதா, சுனாமி நிவாரணம், மீள்கட்டுமானம் மற்றும் புனர்வாழ்வு விடயங்களில் பெண்கள் பரபட்சத்தக்கு உள்ளாக்கப்பட்டதையும் பெண்கள் இவை பற்றிய முடிவுகளில் பங்கேற்க வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார். இம்மக்கள் மன்றின் நிபுணர் குழுவில் பங்கேற்ற சுமேஸ் மங்களாசாரி, சர்வதேச நிதி நிறுவனங்களான World Bank and Asian Development Bank இன் நடவடிக்கைகள் பற்றியும் கேள்வி எழுப்பினார். உல்லாசப் பயணத்துறையை ஊக்குவிக்கும் இந்நிறுவனங்களின் முயற்சி பாலியல் உல்லாசப் பயணத்தையும் சிறுவர்கள் மீதான பாலியல் சுரண்டலையும் ஏற்படுத்துவதாக அங்கு தெரிவிக்கப்பட்டது.

இந்த மக்கள் மன்றம், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினையை ஆராய முற்பட்டு உள்ளது. இலங்கையிலும் இவ்வாறான ஒரு உண்மையை அறியும் மக்கள் மன்றம் அமைக்கப்பட்டு சுயாதீனமாகச் செயற்பட அனுமதிக்கப்பட்டு இருந்தால் பல உண்மைகள் வெளியாகி இருக்கும். சுனாமிக்கு ஒதுக்கப்பட்ட ஒவ்வொரு டொலரிலும் நிர்வாகச் செலவு எவ்வளவு மக்களுக்கு எவ்வளவு போய்ச் சேருகிறது என்று பார்த்தால் நீதிபதி சுரேஸின் கூற்று முற்றிலும் உண்மை என்பது புலப்படும். இதுவே சுனாமி நிவாரணம், மீள்கட்டுமானம், புனர்வாழ்வின் நிலை.

இலங்கைத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை குறிப்பாக வடக்கு கிழக்கு தமிழ் மக்களைப் பொறுத்தவரை சுனாமியின் கோரத்தை அவர்கள் மறக்கக் கற்றுக்கற்றுக் கொடுக்கப்பட்டார்கள். அரச படைகள், அதன் துணைப் படைகள், அவர்களை எதிர்க்கும் புலிகள் என இவர்கள் சுனாமியிலும் கொடிய வதையை அம்மக்களுக்கு வழங்கி அம்மக்களை வாழ்வின் விளிம்புக்கே கொண்டு சென்று விட்டனர். சில நிமிட நேரத்திலேயெ நாற்பதினாயிரம் உயிர்கள் இழக்கப்பட்ட பின்னும் இலங்கையில் சமாதானம் என்பது தொடர்ந்தும் கேள்விக் குறியாகவே இருந்து வருகிறது. தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்கள் இணைந்து மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டனர். ஆனால் தமிழ் - சிங்கள அரசியலிலும் ஊடகங்களிலும் ஆளுமை செய்யும் தேசியவாத சக்திகள் சமாதானத்தைப் பலப்படுத்துவதற்குப் பதிலாக ஒருவரை ஒருவர் சமாதானத்தின் எதிரியாகவே சித்திரித்தனர். மூவின மக்களும் நெருங்கி வந்துவிடக் கூடாது என்பதில் அவர்கள் உறுதியாகவே உள்ளனர்.

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு சட்ட விதிகளுக்கு அமைய நாட்டை ஆளும் அரசுக்கே அதிகம். வி.புலிகள் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொள்வதால் அம்மக்களின் சமாதான வாழ்வுக்கு அவர்களும் பொறுப்புடையவர்களே. ஆகவே ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டி தமது பொறுப்புகளை தட்டிக் கழிக்காமல் நேரடியாக சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பிரச்சினைகளைத் தீர்க்க கடந்த மூன்று ஆண்டுகளில் சந்தர்ப்பம் ஏற்படவில்லை என்று யாரும் கூறிவிட முடியாது. வி.புலிகள் சமாதானத்தை விரும்பவில்லை என்று நொண்டிச்சாட்டுச் சொல்லி காலம் கடத்தத் தேவையில்லை. சர்வகட்சிக் குழுவால் APRC முன்வைக்கப்பட்ட திர்வுத் திட்டத்தையே அரசு ஏற்றுக் கொள்ளத் தயங்குகிறது. இதற்கு அரசாங்கம் வி.புலிகளிடம் அனுமதி பெற வேண்டியதில்லை.

தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளக் கூடிய நியாயமான தீர்வு ஒன்றை அறிவித்தால் வி.புலிகள் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கும். அதனை மாறி மாறி ஆட்சிக்கு வந்த எந்த அரசும் முன்வைக்கவில்லை. வி.புலிகள் என்ற அமைப்பு உருவாகி இவ்வளவு தூரம் வளர்வதற்கு காலத்துக்கு காலம் இலங்கையை ஆட்சி செய்த ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசுகள் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட ஒடுக்கு முறையே காரணம். ஒடுக்கு முறை என்ற இந்தக் காரணியை அகற்றினால் தமிழ் மக்களின் நம்பிக்கையை அரசால் வென்றெடுக்க முடியும். அப்படி ஒரு நிலை ஏற்படும் பட்சத்தில் தமிழ் மக்களுக்கு வி.புலிகள் என்ற அமைப்பு தேவைப்படாது.

இலங்கையில் உள்ள இனப் பிரச்சினை ஒன்றும் எந்த நாட்டிலும் காணப்படாத அபூர்வமான பிரச்சினை அல்ல. ஏற்கனவே பல நாடுகள் இவ்வாறான பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வைக் கண்டு இன்று முன்னேறிச் செல்கின்றன. சுனாமியால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட ஆச்சே மாநிலத்தில், விடுதலைப் போராளிகளும் இந்தோனேசிய அரசும் சமாதானமாகச் செல்கின்றனர். சுனாமிக்குப் பின் மக்களிடையே மனிதாபிமானம் மேலும் தளைத்து இருந்தது. மக்கள் நலன்களை முன்நிலைப்படுத்தும் பட்சத்தில் சமாதானத் தீர்வு ஒரு பிரச்சினையே அல்ல.

## கருணாவை இறுக்கும் ....... 6ம் பக் தொடர்ச்சி

ஒரு நாள், குற்றம் செய்பவர்கள் எந்த தேசத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் பாதிக்கப்பட்டவர்கள் எந்த தேசத்தவர்களாக இருந்தாலும் குற்றவாளிகளை அவர்களது குற்றங்களுக்கு பொறுப்பாளிகளாக்குவோம் எனத் தெரிவித்தார்.

அமெரிக்கா, பிரித்தானியா போன்ற வல்லரசுகள் உலகின் பல்வேறு பாகங்களிலும் பல்வேறு போர்க் குற்றங்களை மேற்கொண்டு பல்லாயிரக் கணக்கான உயிர்களைப் பறித்துள்ளன. பல்வேறு மனித உரிமைகளையும் பல நூற்றுக்கணக்கான உயிர்களைப் பறித்தவர்களும் இவ்வுலகில் உள்ளனர். அப்படி இருக்கையில் கருணா மட்டும் ஏன்?

அப்பாவி மக்கள் மீது வன்முறையை ஏவி அவர்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை மறுத்து அவர்களின் வாழ்வுரிமையை மறுக்கும் அனைவரும் தண்டிக்கப்பட வேண்டியவர்களே. அவர்களுக்கான தண்டனையை வழங்கக் கோருவது நியாயமானதே. அத்தண்டனையை வழங்க சந்தர்ப்பம் கிடைத்தால் அதனை நிறைவேற்ற அழுத்தம் வழங்குவதும் நியாயமானதே. ஜோர்ஜ் புஸ், ரொனி பிளேயர், மகிந்த ராஜபக்ச, வே பிரபாகரன், கேணல் கருணா, பிள்ளையான்...... யாராக இருந்தாலும் மனித விழுமியங்களுக்கு எதிரானவர்கள் அதற்கான தண்டனையைப் பெற வேண்டும். அது மற்றவர்களுக்கு ஒரு பாடமாகவும் அமையும்.

உண்மைகள் உறங்குவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் மேவின் சில்வாவிற்கு ரூபவாகினி ஊழியர்கள் தர்ம அடி

டிசம்பர் 27ம் திகதி ரூபவாகினி கலையகத்திற்குள் நுழைந்த தொழில் அமைச்சர் மேவின் சில்வாவும் அவரது அடியாட்களும் ரூபவாகினி இயக்குநரையும் அவர்களது ஊழியர்களையும் பயங்கரத்திற்குள் தள்ளியது நேரடியாக தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகியது.



மிக மோசமடைந்துள்ள மகிந்த அரசின் அரசியல் ரவுடித்தனம் நேரடியாக ஒளிபரப்ப்ப்பட்டதுடன் மேவின் சில்வாவிற்கும் அவருடன் வந்திருந்த அடியாட்களுக்கும் ரூபவாகினி ஊழியர்கள் தர்ம அடி வழங்கி உள்ளனர். அமைச்சர் அடிவாங்குவதை இலங்கை மக்கள் தொலைக்காட்சியில் பார்த்து ரசிக்க ஊடகவியலாளர்கள் ரூபவாகினி ஊழியர்களுக்கு ஆதரவு வழங்கி ரூபவாகினி கலையகத்தை சூழ்ந்துகொண்டனர். இறுதியில் விசேட கொமான்டோக்கள் கலையகத்திற்குள் நூழைந்து ரவுடித்தனத்தில் ஈடுபட்ட அமைச்சரை காப்பாற்றி அழைத்துச் சென்றனர்.

அரசாங்கத்தின் ஜனநாயக மறுப்பு அடாவடித்தனம் மற்று காடைத்தனங்களுக்கு எதிராக மக்கள் கிளர்ந்து எழுவார்கள் என்பதை குறிப்பாகக் காட்டிய இச்சம்பவம் மக்கள் பலத்தை மக்களுக்கே காட்டி உள்ளது. அதுவும் அரச ஊடகமான ரூபவாகினியிலேயே அது காட்டப்பட்டு உள்ளது.

## மாவீரர் தினத்தில் கலந்து கொண்ட பிரித்தானிய பா உ கீத் வாஸ் சிக்கலில்

லண்டன் எக்செல் மாவீரர் தினக் கூட்டத்தில் கலந்து கொண்டதன் மூலம் பா உ கீத் வாஸ் சிக்கலில் மாட்டி உள்ளார். பிரித்தானியாவில் பயங்கரவாத இயக்கமாக தடை செய்யப்பட்ட விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரனின் வன்முறையை ஊக்குவிக்கும் உரை ஒளிபரப்பப்பட்ட அதே மேடையில் தோன்றியதாக பிரித்தானியாவின் தேசிய நாளிதலான த ரைம்ஸ் கீத் வாஸ் மீது குற்றம்சாட்டி உள்ளது.



பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு பொறுப்பான Commons Home Affairs Select Committee, தலை வரான இவர் பிரித்தானியாவில் தடை செய்யப்பட்ட இயக்கத்தின் தற்கொலைத் தாக்குதல்கள் பற்றி தன்னால் உணர முடிவதாகவும் அங்கு தெரிவித்து உள்ளார். கீத் வாஸிற்கும் அவருடன் கலந்து கொண்ட மற்றுமொரு பா உ ஜோன் றயனுக்கு எதிராகவும் இலங்கை உயர் ஸ்தானிகராலயம் கடுமையான அதிருப்தியை வெளியிட்டு உள்ளதுடன் இவர்கள் அக்கூட்டத்தில் கலந்து கொண்டது பிரித்தானிய பயங்கரவாத சட்டத்திற்கு எதிரானது என்றும் தெரிவித்து உள்ளது.

இந்நிகழ்வில் சட்டவிரோத நடவடிக்கைகள், குற்றங்கள் நிகழ்ந்ததா என்பதை பொலிஸார் விசாரிப்பதாகவும் த ரைம்ஸ்ற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. பொலிசார் இந்நிகழ்வை பதிவு செய்துள்ளதாகவும் தங்களிடம் உள்ள தகவல்களை ஆய்வு செய்வதாகவும் த ரைம்ஸ் தெரிவிக்கிறது.

தனக்கு பிரபாகரனின் மாவீரர்தின உரையில் எந்த ஆர்வமும் இல்லையெனக் குறிப்பிட்ட கீத் வாஸ், சர்வகட்சிக் குழுவின் தகவலை தனது தொகுதியில் இருந்து தெரிவிக்கவே தான் கலந்துகொண்டதாக கீத் வாஸ் தெரிவித்தார்.

## தமிழகத்தில் துப்பாக்கிச் சூட்டின் பின் நக்சல் போராளிகள் ஐவர் கைது

தமிழகத்தின் தேனி மாவட்டத்தில் நக்சல் போராளிகள் ஐவர் கைது செய்யப்பட்டிருப்பதாக Superintendent of Police ஆர் சுதாகர் தெரிவித்துள்ளார். 45 நிமிட நேரம் நீடித் தப்பாக்கிச் சமரின் பின்னரே இவர்கள் கைத செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். டிசம்பர் 19ல் வருசநாடு குன்றுத் தொடரிலேயே இச்சம்பவம் இடம்பெற்று உள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள்: மகாலிங்கம் - திருப்பத்தூர் வேலூர் மாவட்டம், மருது என்று அழைக்கப்படும் லெனின் - மானாமதுரை, முருகானந்தம் - விருதாச் சலம், சச்சின் என்றழைக்கப்படும் யோகேஸ் - சதிஸ்கர், மாறன் என்றழைக்கப்படும் பாலமுருகன் - செல்லூர் மதுரை மாவட்டம் ஆவர். இவர்களில் மகாலிங்கம், மருது, முருகானந்தம் ஆகியோர் சூட்டு காயங்களுடன் தேனி மாவட்டம் ஆண்டிப் பட்டியில் உள்ள அரச மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றனர்.

The Inspector-General of Police (South zone), சஞ்ஜீவ் குமார் and Deputy Inspector - General of Police ஆர் கிருஸ்ணமூர்த்தி Superintendent of Police (STF) பொன் மாணிக்கவேல் ஆகியோர் இவர்கள் மீதான விசாரணையை மேற்கொண்டு உள்ளனர்.

என்கவுண்டர் என்ற பெயரில் நக்சல் போராளிகள் பலர் பொலிசாரால் கொல்லப் பட்டுள்ளனர். இவ்வாறான சம்பவங்கள் தமிழகத்தில் ஏற்கனவே இடம்பெற்றும் உள்ளது. மேலும் இப்போராளிகளை சாதாரண கிமினல் குற்றவாளிகள் போல் மக்களுக்குக் காட்டி அவ்வாறான கொலைகளை நியாயப்படுத்தும் ஒரு போக்கும் தமிழக பொலிசாரிடம் உள்ளதாக அங்குள்ள சுயாதீன உரிமை அமைப்புகள் குற்றம் சாட்டுகின்றன. தமிழக ஊடகங்களும் சினிமாவும் இவ்வாறான என்கவுண்டர்களை நியாயப்படுத்த முயல்வதும் குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்டவர்களை பார்க்க அவர்களது வழக்குரைஞர்கள் அனுமதிக் கப்படாததால் அவர்களது உண்மை நிலவரங்கள் பற்றி அறிந்து கொள்ள முடியாமல் உள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**வோல்தம்ஸரோ கற்பக விநாயகர் ஆலயம்**

**2 - 4 Bedford Rd, Walthamstow, London, E17 4PX Tel: 020 8527 3819**

**விசேட தினங்கள்**

கஜமுக சம்காரம்: 14 டிசம்பர் 2007 மாலை 5.50 மணிக்கு

ஐயப்ப மண்டல பூர்த்தி: 26 டிசம்பர் 2007 மாலை 5.30 மணிக்கு

**மாதாந்த காயத்திரி அம்மன் வழிபாடு**

காயத்திரி யாக வழிபாடு ஞாயிற்றுக் கிழமைகளில்

30 டிசம்பர் 2007

06 ஜனவரி 2008

03 பெப்ரவரி 2008

09 மார்ச் 2008

காலை 10 மணிக்கு விசேட அபிஷேகத்தைத் தொடர்ந்து விசேட பூசை 108 காயத்திரி ஜப சமர்ப்பணம், திருவீதியுலா.

**மங்கள நிகழ்ச்சிகளுக்கு மேளம் நாதஸ்வரம் ஏற்பாடு செய்து தரப்படும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org